# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**250/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி அன்புசெல்வி | ஊர் | : | பூதலூர் |
| க.பெ. | : | திரு.சிவசாமி | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 50 | தொழில் | : | விவசாயம் |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் நாள் **வா.சா.2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் என்னை 8.7.2008இல் பதிவான கிரைய சாசனத்தில் சாட்சி கையெழுத்து போட்டது தொடர்பாக அழைக்கபட்டுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 7வது பக்கத்தில் சாட்சி பகுதியில் 2வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது. அந்த சாட்சி கையெழுத்து **வா.சா.ஆ.3** ஆகும். அந்த கிரைய பத்திரம் நம்பிக்கைமேரியிடமிருந்து சவரிமுத்து என்பவர் கிரையம் வாங்கினார். நம்பிக்கைமேரிக்கு சவரிமுத்து அண்ணன் ஆவார். என்னை சாட்சி கையெழுத்துபோட நம்பிக்கைமேரி அழைத்தார். நம்பிக்கை மேரி வீட்டு பக்கத்தில் நான் குடியிருந்தேன். நம்பிக்கைமேரி அவருக்கு குழந்தையில்லாததால் சொத்தை அண்ணனுக்கு எழுதிகொடுப்பதாக சொன்னார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் விவசாயம். கையெழுத்துபோட்டபோது என்ன வேலை பார்த்தேன் என்றால் விவசாயம். 2008 ஆம் ஆண்டு பதிவாளர் அலுவலகத்தில் நான் தற்காலிகமாக பணிசெய்தேன் என்றால் கட்சி சார்பாக போய்வரும் வழக்கம் உண்டு. வேலை பார்க்கவில்லை. நான் கையெழுத்து ஆங்கிலத்தில் போட்டுள்ளேன் என்றும் ஆங்கிலம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் ஆங்கிலத்தில் கையெழுத்து மட்டும் போடுவேன். முதல்சாட்சி

கையெழுத்து போட்டவர் வாதிக்கு உறவினர் என்றும் அவர் திருச்சியில் குடியிருந்தார் என்றும் அந்த விபரம் தெரியாததால் தான் அவர் வில்வராயன்பேட்டையில் வசிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி அழைத்ததன்பேரில் சாட்சி அளிக்க வந்தேன் என்றால் அவர் யார் என்றே தெரியாது நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததால் வந்துள்ளேன். செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன எழுதபட்டுள்ளது என்றால் அது கிரைய பத்திரம். சாட்சி கையெழுத்து என்ன விலாசம் உள்ளது என்றால் பூதலூர் என்று உள்ளது. உங்கள் வீட்டிற்கு எண் இல்லையா என்றால் உள்ளது. எனக்கு வந்த அஞ்சல் உறையில் முழுவிலாசம் உள்ளது என்றால் ஆமாம். சந்தைபேட்டை தெரு, பெரியார்புரம் என்று அந்த உறையில் உள்ளது என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட பத்திரத்தில் அந்த விலாசம் இல்லை என்றால் ஆமாம். என்னுடைய விலாசம் வாதிக்கு தெரியும் என்றும் அதனால்தான் வழக்கறிஞர் மூலமாக சம்மன் அனுப்பி என்னை விசாரிக்கிறார் என்றால் என்னைதேடி விசாரித்திருக்கலாம் எனக்கு தெரியாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.11 17:28:35 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.